DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | **S.C. 3/2022** |
| Deposition of Witness for | : | **P.W. 5** |
| Name | : | **அபினாஷ்குமார்** |
| Father's Name | : | **ரவிச்சந்திரன்** |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 19.02.2026

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது திருப்புவனம் தாலுகா கலியாந்துாரில் குடியிருந்து வருகிறேன். நான் சென்னையில் கார் கம்பெனியில் வேலை பார்த்து வருகிறேன். காயம்பட்ட அ.சா.2 சேங்கைசாமி என்பவரை எனக்கு தெரியும். சாட்சிகள் அ.சா.3 மலைராஜன், அ.சா.4 திவாகர் ஆகியோரை தெரியும். எதிரி முத்துக்குமார் என்பவரை எனக்கு தெரியும். 17.02.2021ம் தேதி காலை சுமார் 7.30 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது எதிரி முத்துக்குமார் என்பவர் அ.சா.2 சேங்கைசாமி என்பவரை வெட்டிவிட்டதாக சொன்னார்கள்.

2. நான் கேள்விப்பட்டு திருப்புவனம் அரசு மருத்துவமனைக்கு அ.சா.2 சேங்கைசாமி என்பவரை பார்க்க சென்றேன். நான் மருத்துவமனையில்

சேங்கைசாமிக்கு எங்கெங்குகாயங்கள் இருந்தது என்று பார்க்கவில்லை. வழக்கு சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை. புகார் கொடுக்கும்போது சாட்சியாக எனது பெயரையும் சேர்த்து கொடுத்து விட்டார்கள். போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுதரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அனுமதிக்கும்படி அனுமதி வேண்டப்பட்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை :**

போலிசார் இவ்வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள் என்றும் விசாரணையின் போது அ.சா.2 சேங்கைசாமி என்பவருக்கும் எதிரி முத்துக்குமார் என்பவருக்கும் இடையே அவரது தாயாருடன் சேங்கைசாமி என்பவர் நெருக்கமாக பழகியது தொடர்பாக முன்விரோதத்தில் கடந்த 17.02.2021ம் தேதி காலை 7.15 மணியளவில் எங்கள் ஊரில் உள்ள ஊரணி படிக்கட்டு அருகே அ.சா.2 சேங்கைசாமி நின்றுகொண்டிருந்தபோது எதிரி அங்கு வந்து கையில் வைத்திருந்த அருவாளால் அ.சா.2 சேங்கைசாமியை தலை. தாடை, வலது பக்க தோள்பட்டை, வலது கைபுஜம், வலது கை மணிக்கட்டு ஆகிய இடங்களில் மாறி மாறி வெட்டி காயப்படுத்தினார் என்றும் நானும் அருகில் இருந்த மலைராஜ், அஜித் ஆகியோர்கள் எதிரியை தடுக்க முற்பட்டபோது எதிரி அருவாளை காட்டி கொலை மிரட்டல் செய்தார் என்றும் பின்பு காயம்பட்ட அ.சா.2 சேங்கைசாமியை ஒருபோக்கு ஆட்டோவில் திருப்புவனம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம் என்றும் போலிசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது நான் வழக்கு சம்பவத்தை நேரில்

பார்த்த விபரத்தை மறைத்து எதிரிக்கு சாதமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**: இல்லை

**மறு விசாரணை**: இல்லை

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.02.19 10:37:44 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் ,**

**சிவகங்கை..**